பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர் 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 கார்த்திகை 04 வியாழக்கிழமை (19-11-1992) UTHAYAN — A Lively National Tamil Daily ஒளி 357

### விடுதலைப் புலிகளுடன் பேசி

# போரை முடிவுக்கு கொண்டுவர குருமார், அறிஞர் வலியுறுத்து

## 9 அம்சங்கள் முன்வைப்பு

கொழும்பு, நவம்பர் 19

வடக்கு - கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருமாறு, தெற்கின் மதகுருமார்கள் மற்றும் அறிஞர்கள் கொண்ட சமாதானக் குழு அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளது.

விடுதலைப் புலிகளுடன் பேசுவது உட்பட ஒன்பது அம்ச சமாதானப் பேச்சுத் திட்டம் ஒன்றையும் பிரஸ்தாப குழு நேற்று அறிக்கை மூலம் வெளியிட்டது.

இதேவேளை, தெற்கின் பத்து மாவட்டங்களுக்குத் தாம் சென்று நடத்திய ஆய்வு மதிப்பீடு ஒன்றிலிருந்து யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து சமாதானத்தை நிலைநாட்டுவதையே சிங்கள மக்கள் விரும்புவதாக சமாதானக் குழுவின் தலைவர் திரு. யோகான் தேவானந் தெரிவித்துள்ளார்.

பௌத்த மதத் தலைவர்கள், கிறிஸ்தவ மத குருமார், இந்துக்கள், அறிஞர்கள், கல்விமான்கள், மருத்துவர்கள், விரிவுரையாளர்கள் கொண்ட சமாதானக் குழு யுத்தத்தை நிறுத்த வேண்டிய தன் அவசியத்தை வலியுறுத்தி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தநிறுத்தம் குறித்து பரிசீலிக்க அரசுக்கு அவசியம் எழவில்லை

### நாடாளுமன்றில் பிரதமர் தகவல்

கொழும்பு, நவ. 19

யுத்த நிறுத்தக் கோரிக்கை எதையும் விடுதலைப் புலிகள் விடுக்கவில்லை. எனவே யுத்த நிறுத்தம் குறித்துப் பரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் அரசாங்கத்துக்கு எழவில்லை.

பிரதமர் டி.பி. விஜேதுங்கா நேற்று முன்தினம் நாடாளுமன்றில் இவ்வாறு தெரிவித்தார்.

குவாக்கர் சமாதானக் குழுவினரின் யாழ்ப்பாண விஜயம் மற்றும் விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்தக் கோரிக்கை தொடர்பான செய்திகள் குறித்து சுதந்திரக் கட்சி எம்.பி. நிமல் சிறிபால டி சில்வா எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது;

குவாக்கர் சமாதானக்குழு புலிகளின் யுத்த நிறுத்தக் கோரிக்கை பற்றி அரச அதிகாரிகளுடன் பேச்சுக்கள் எதையும் நடத்தவில்லை;

அக்குழு அரசின் விருப்பத்துக்கு இணங்க யாழ்ப்பாணம் செல்லவில்லை; அதன் சொந்த விருப்பிலேயே யாழ்ப்பாணம் சென்றது; எனினும் குவாக்கர் குழு யாழ்ப்பாணம் செல்வதற்கு முன்னர் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற்றது— என்றார். (த)

## இலங்கையில் விளையாட மறுத்து நியூஸிலாந்து வீரர்கள் ஐவர் திரும்பிச் செல்கின்றனர்

கொழும்பு, நவ 19

இலங்கை கிரிக்கெட் விஜயத்தைத் தொடருவது என்ற முடிவை நியூஸிலாந்து கிரிக்கெட் அணி தனது வீரர்கள் மத்தியில் வாக்கெடுப்பு ஒன்றை நடத்தியே எடுத்தது என்று தற்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தொடர்ந்து இலங்கையில் கிரிக்கெட் போட்டிகளில் கலந்து கொள்வது என்ற முடிவை ஐந்து நியூஸிலாந்து வீரர்கள் எதிர்த்து வாக்களித்தனர் என்றும்—

நியூஸிலாந்துக்குத் திரும்பிச் செல்லும் இந்த ஐந்து வீரர்களுக்கும் பயிற்சியாளருக்கும் பதிலாக புதிய வீரர்களை நியூஸிலாந்து கிரிக்கெட் சபை அனுப்பி வைக்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை அணிக்கும் நியூஸிலாந்து அணிக்கும் இடையேயான கிரிக்கெட் போட்டிகள் புதிய அட்டவணைப்படி இடம்பெறும் என்று அறிவிக்கப்படுகின்றது.

நியூஸிலாந்து அணியினர் தங்கியிருக்கும் தாஜ் சமுத்திரா ஹோட்டல் முன்பாக கடந்த திங்கள் காலை கடற்படைத் தளபதி கிளான்ஸி பெர்னாண்டோ படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து தமது இலங்கை கிரிக்கெட் விஜயத்தை ரத்துச் செய்வது என்று நியூஸிலாந்து அணி முன்னர் தீர்மானித்து இருந்தது. தெரிந்ததே.

தற்போது வாக்கெடுப்பு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## தமிழீழ காவல்துறை ஓராண்டு பூர்த்தி இன்று

யாழ்ப்பாணம், நவ. 19

தமிழீழ காவல்துறை உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டு இன்றுடன் ஓராண்டு பூர்த்தியடைகின்றது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனால் காவல்துறை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தமிழீழ காவல்துறை செயற்படத் தொடங்கியதிலிருந்து யாழ்ப்பாணம், சங்கானை, சுன்னாகம், பருத்தித்துறை, கோப்பாய், வல்வெட்டித்துறை, பளை, சாவகச்சேரி, நாகர்கோவில் ஆகிய இடங்களில் காவல்துறை பணிமனைகள் அமைக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றன.

நகரப் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு, குற்றப் புலனாய்வுப் பிரிவு பணிமனைகளும் அமைக்கப்பட்டுள்ளன. (இ-5)

## மருத்துவபீட மாணவர்கள் நேற்றுப் பகிஷ்கரிப்பு போர்!

### மாணவனை இடைநிறுத்தும் உத்தரவு நீக்கம்

யாழ்ப்பாணம், நவ. 19

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் அனைவரும் நேற்று தமது விரிவுரைகளையும், யாழ். ஆஸ்பத்திரிக் கிளினிக் வகுப்புகளையும் பகிஷ்கரித்தனர். எனினும் நேற்று நண்பகலுடன் மாணவர்களின் பகிஷ்கரிப்புப் போராட்டம் கைவிடப்பட்டதாக அறியவந்தது. மாணவர்கள் இன்று வழமை போல் தமது வகுப்புகளுக்கு சமுகமளிப்பர் என எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மருத்துவபீட மாணவர் ஒருவர் கடந்த மூன்றாம் திகதி முதல் பல்கலைக்கழக நிர்வாகத்தினால் இடைநிறுத்தி வைக்கப்பட்டதை ஆட்சேபித்தே மாணவர்கள் பகிஷ்கரிப்புப் போராட்டத்தை முன்னெடுத்ததாக மாணவர்

3 ஆம் பக்கம் பார்க்க)

## பெனாசிர் பூட்டோவும் தாயார் நுஸ்ரத்தும் கைது

இஸ்லாமபாத், நவ. 19

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோவும் அவரது தாயார் நுஸ்ரத் பூட்டோவும் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

பிரதமர் நவாஸ் ஷெரிப் தலைமையிலான அரசு பதவி விலக வேண்டும் என்றும்— புதிதாக தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும் கோரி பாகிஸ்தான் நாடாளுமன்றத்தின் முன்னால் போராட்டம் நடத்துவதற்கான நடைபவனியில் கலந்து கொள்வதற்காக தனது வீட்டில் இருந்து பாதுகாப்புத் தடைகளை மீறி வெளியே வந்த போது பெனாசிர் பூட்டோ கைது செய்யப்பட்டார்.

இன்னொரு பகுதியில் நடைபவனிக்குத் தலைமை வகித்துச் சென்றபோது நுஸ்ரத் பூட்டோ கைது செய்யப்பட்டார்.

பெனாசிர் பூட்டோ கைது

[3 ஆம் பக்கம் பார்க்க]

## தாக்குதல் நடத்த வருபவரிடம் சாரதி லைசென்ஸ் இருக்குமா?

### இராணுவ அதிகாரிகள் சந்தேகம்

கொழும்பு, நவ. 19

குண்டுத் தாக்குதல் நடத்தச் செல்லும் தற்கொலைப் படைவீரர் ஒருவர் தாக்குதல் நடத்தச் செல்லும் போது தம்முடன் தமது சாரதி அனுமதி லைசென்ஸையும் எடுத்துச் செல்வாரா?

இவ்வாறு இராணுவ உயர் அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர் என கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடற்படைத் தளபதி கிளான்ஸி பெர்னாண்டோ மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட இடத்தில் இருந்து கைப்பற்றியதாக பொலிஸார் தெரிவிக்கும் சாரதி அனுமதி லைசென்ஸ் தற்கொலைப் படைவீரருடையதாக இருக்க முடியாது என்றும் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

அந்த சாரதி அனுமதி லைசென்ஸில் இருந்து எடுக்கப்பட்ட படம் டெலிவிஷனிலும், பத்திரிகைகளிலும் முக்கிய இடத்தைப் பிடித்துக் கொண்டது குறிப்பிடத்தக்கது. (இ-6)

## குடாநாட்டில் உணவுக் கையிருப்பு முடிவடையும் நிலையில்!

யாழ்ப்பாணம், நவ. 19

யாழ். மாவட்டத்தில் உணவுப் பொருள்களின் கையிருப்பு முடிவுறும் நிலையை அடைந்துள்ளது.

யாழ். மாவட்டத்தின் உணவு நிலை குறித்து மேற்கொள்ளப்பட்ட [illegible] ரங்கள் இந்த அதிர்ச்சிக்க[illegible]லை தெரிவிக்கின்றன.

யாழ். மாவட்டத்தில் இடம்பெயர்ந்தோர், வெளி மாவட்டங்களைச் சேர்ந்தோர் உட்பட 8 லட்சத்து 50 ஆயிரம் பேர் உள்ளனர்;

அவர்களுக்கு மாதாந்தம் அரிசி, மா, சீனி, பருப்பு, [illegible] 15 ஆயிரம் மெற்றிக் தொன் உணவுப் பொருள் [illegible]

ஆனால் கப்பல் மூலம் மாதாந்தம் 6 ஆயிரம் மெற்றிக் தொன் உணவுப் பொருள்களே எடுத்துவரப்படுகின்றன.

மிகுதி 9 ஆயிரம் மெற்றிக் தொன் உணவுப் பொருள்களை தனியார் எடுத்து வந்தனர்.

கொம்படி பாதை மூடப்

[3 ஆம் பக்கம் பார்க்க]

வனமே வனமே நிலைகொள்வாய்
மனமாய் மழைக்கு மருந்தாவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## சங்கீதம்

எதிர்வரும் வகுப்பேற்றத் தேர்வில் கூடுதல் புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள 6ஆம், 7ஆம், 8ஆம், 9ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு ஏற்றது சங்கீதம் வினா-விடை. ஆக்கம்: திருமதி தா. சுஷாயணி சிவானந்த சர்மா. [23274]

## இலவச திருமண சேவை

35 வயது, அனுசம், படித்த பெண்ணுக்கு கௌரவமான குடும்பத்தில் மணமகன் தேவை. தகுதிக்கு ஏற்ப சீதனம் வழங்கப்படும். தொடர்பு: ஞானிரு சாலையில். து விமலா, யாழ். நாச்சிமார், கோவிலடி. [23286]

## Engineering Journal

Journal of the Institution of Water and Environmental Management (IWEM) London பிந்திய இதழ்கள் உடன் விற்பனைக்கு. யாழ். பழைய புத்தகக் கடை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (5577)

## யோகாசன கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ. 19

அகில இலங்கை சர்வமத யோகாசன நிறுவனத்தினர் ஏற்பாடு செய்துள்ள யோகாசனக் கருத்தரங்கு எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3-30 மணிக்கு நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும். (த)

## அகதிகளுக்கு தொழுநோய் ஆய்வு

தாவடி, நவ. 19

நாவற்குழியில் அகதி முகாமில் தொழுநோய் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளை யாழ். பிராந்திய சுகாதார சேவைத் திணைக்கள தொழுநோய்த் தடுப்புப் பிரிவு செய்துள்ளது. (ஒ-144)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

தற்காலிக உதவி விரிவுரையாளர் (தாவரவியல் / இரசாயனவியல் / கணிதமும் புள்ளிவிபரவியலும் / விலங்கியல் / பௌதீகவியல் / கணனி விஞ்ஞானம்) பதவிக்கு விண்ணப்பங்கள் கோரிய 1992 - 09 - 15 திகதியிடப்பட்ட விளம்பரம் சம்பந்தமானது.

தற்காலிக உதவி விரிவுரையாளர் (தாவரவியல் / இரசாயனவியல் / கணிதமும் புள்ளிவிபரவியலும் / விலங்கியல் / பௌதீகவியல் / கணனி விஞ்ஞானம்) பதவிக்கு இறுதித் தேர்வுக்கு / விசேட பட்டதாரிக்கான தேர்வுக்கு தோற்றி பெறுபேறுகளுக்காக காத்திருப்போரும் விண்ணப்பிக்கலாம். மேற்படி பதவிக்கு ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பங்களை அனுப்பத் தேவையில்லை.

விண்ணப்பங்கள் யாவும் 1992 - 11 - 30ஆம் திகதிக்கு முன்னதாக சிரேஷ்ட உதவிப் பதிவாளர் / தாபனப் பிரிவுக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

– பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
1992-11-13.

[சி-3862]

# பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம்

(மட்டுப்படுத்தப்பட்டது)

## சகல பொதுச்சபைப் பிரதிநிதிகளுக்கும்

## விசேட பொதுக்கூட்டம்-05-12-1992

மேற்படி சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் 05 - 12 - 1992ஆம் திகதி சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு சங்க தற்காலிக காரியாலய மண்டபத்தில் (அரச இயந்திர மட்கல நிலையம், சங்கானை) சங்கத் தலைவர், திரு. மா. புலேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெறும். தயவு செய்து பொதுச்சபை உறுப்பினர்களை தவறாது குறித்த நேரத்தில் கூட்டத்திற்குச் சமூகமளித்து, ஒத்துழைப்பு நல்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மா. புலேந்திரன்
தலைவர்.


ஆ. நாகராசா,
செயலாளர்.

பண்டத்தரிப்பு-
பரிஷ் ப. நோ. கூ. சங்கம்.

முக்கிய குறிப்பு: கூட்ட நிகழ்ச்சி நிரல் கிடைக்கப் பெறாதோர் சங்க காரியாலயத்தில் செயலாளருடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

[இ 8784]

# ஓராண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 10 — 11 — 1917 | 16 — 11 — 1991 |

அமரர்

## பொன்னையா செல்லத்துரை

திதி: 19 - 11 - 1992

பாசமும் அன்பும் உள்ள அப்பா!
எங்களைப் பிரிந்து ஆண்டு ஒன்று சென்றாலும்
கண்ணீரால் வாடுகிறோம்
உங்களை போன்ற அப்பாவை
இப் பூமிதனில் என்று காண்போம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் வாடும்;
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பொன்னையா லேன்,
சோக்குளில் மேற்கு,
சோக்குளில். [23310]

# ஓராண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 13 — 03 — 19[illegible]1 | 17 — 11 — 1991 |

அமரர்

## சுப்பிரமணியம் தனலெட்சுமி

(இராசமணி)


திதி: 19 — 11 — 1992

அன்புடனும், பண்புடனும் எமை நெறிப்படுத்திப் பெருவாழ்வு தந்த அருமைத் தாயே! ஆண்டு ஒன்று கழிந்தாலும் மறவோம் உம் திருவுருவை.

அன்புடன் நினைவு கூரும்;
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரி குடும்பம்.

சீனிவாசகம் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம். [23297]

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 13 — 12 — 1939 | 22 — 11 — 1989 |

## அமரர் பொன்னையா தனபாலசிங்கம்

(வலி-கிழக்கு வட பகுதி ப. நோ. கூ. சங்கம் - அச்சுவேலி கிளை முகாமையாளர்)

திதி: 19 — 11 — 1992

அன்பின் உருவாய், பண்பின் பிறப்பிடமாய், பாசத்துடன் எம்மையெல்லாம் வழிநடத்திச் சென்ற எங்கள் அன்புத் தெய்வமே! கண்ணை இமை காப்பது போல எம்மையெல்லாம் காத்தீரே! காலத்தின் கோலத்தால் காலன் உமை அழைத்து ஆண்டு மூன்று சென்றாலும், உங்கள் பொன்னான நினைவுகள் எம்மை விட்டு என்றுமே அகலாது.

உங்கள் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கும்:
மனைவி, பிள்ளைகள்,
உடன்பிறந்தோர், மைத்துனர்,
உற்றார், உறவினர்கள்.

அல்பேட் வீதி,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி. [23304]

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 22 — 03 — 1949 | 20 — 10 — 1992 |

## அமரர் இப்பொலிற் பிறின்சி

இவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு, இவரின் இறுதிச் சடங்குகளில் பங்குபற்றி, எமது துக்கங்களில் பங்குகொண்ட அனைவருக்கும் நன்றி கூறுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
அன்புக் கணவர் சூ. இப்பொலிற்,
பிள்ளைகள், அன்புச் சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்.

34/4, 2ஆம் குறுக்குத் தெரு,
பாஷையூர்,
யாழ்ப்பாணம். [23314]

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



## தாமோதரம்பிள்ளை நடராசா

(தபால் சேவகர், மல்லாகம்.)

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 06 — 02 — 1944 | 19 — 11 — 1990 |

இல்லமிழந்தோம் இயற்றிய செல்வம் இழந்தோம்
ஊரிழந்தோம் உற்றார் தனைப் பிரிந்தோம்
கொழு கொம்பாய் நின்ற கோமகனே இறுதியில்
உங்களையும் இழந்து, உதவியின்றி நிற்கின்றோம்
எழிலான உங்கள் முகம் நாம் இனி காண்பதெப்போ?
கண்ணீரை உங்கள் பாதம் காணிக்கை ஆக்குகின்றோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள்.

மல்லாகம். [5438]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ராஜினாமா கோரிக்கை

ஜனாதிபதி பிரேமதாசா பதவி விலக வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளன. கொழும்பு நகரின் கேந்திரப் பகுதியில் வைத்துக் கடற்படைத் தளபதி அட்மிரல் கிளான்சி பெர்னாண்டோ குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டார். அந்தச் சம்பவத்துக்குப் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையிலும், முப்படைகளின் பிரதமதளகர்த்தர் என்ற வகையிலும் பொறுப்பேற்று, ஜனாதிபதி பதவி நீங்கவேண்டும் என்பதே எதிர்க்கட்சிகளின் வாதமாகும்.

கொழும்பு கேந்திர நகர், அரசாங்கத்தின் செயற்பாட்டு முதன்மை நிலையம். பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்ட அங்கே உள்ள பிரதான பகுதி ஒன்றில் வைத்துக் கடற்படைத் தளபதி கொல்லப்பட்டிருக்கிறார். இதுவரை கொலையுண்ட பாதுகாப்புப் படை அதிகாரிகளில் கிளான்சி பெர்னாண்டோவே அதி உயர் பதவியினர்.

மக்களுக்குப் பாதுகாப்பளிப்பதற்காகத் தான் பாதுகாப்புப் படை உண்டு. அப்பேற்பட்ட பாதுகாப்புப் படையின் தளபதிக்கே தலைநகரில் பாதுகாப்பு இல்லை என்றால் மக்களுக்குப் பாதுகாப்பு உண்டு என்று எவ்வாறு கூறுவது?

எனவே மக்களைப் பாதுகாக்க முடியாத ஓர் அரசும், அதன் தலைவரும் பதவியை விட்டு விலகுவதே நியாயம் அந்த வகையில் எதிர்க்கட்சிகள் விடுத்துள்ள கோரிக்கை பொருத்தமானதே. இன்னொரு சனநாயக நாட்டில் இது நடந்திருந்தால் எதிர்க்கட்சிகள் கேட்காமலே பாதுகாப்பு அமைச்சர் பதவி விலகியிருப்பார். ஆனால் ஆசிய நாடுகளில் அந்த அரசியல் பண்பாடும், வரன்முறையும் அருகி விட்டன.

கொழும்பில் இதற்கு முன்னரும் கற்கொலைப் படையினர் இரண்டு பெரும் குண்டுவெடிப்புச் சம்பவங்களை நிகழ்த்தினர். ஒன்றில் பாதுகாப்புத் துணை அமைச்சர் கொல்லப்பட்டார். மற்றையதில் பாதுகாப்புக் கூட்டுத் தலைமையகமே நொருக்கப்பட்டது.

இப்போதைய யுத்தத்தை வடக்கு-கிழக்குக்கு மட்டும் மட்டுப்படுத்தி வைக்காமல் இலங்கையின் எந்தப் பகுதிக்கும் விஸ்தரிக்க முடியும் என்பதையே இக்குண்டு வெடிப்புகள் எடுத்துக் காட்டுகின்றன எனலாம்.

யுத்தம் தமிழர் பிரதேசங்களில் நடப்பதால், அதனால் பாதிக்கப்படுபவர்கள் தமிழர்களே என்பதால், அதனை முடிவுக்குக் கொண்டு வருவதில் அரசு அவசரம் காட்டவில்லை.

முந்திய இரண்டு குண்டு வெடிப்புகளின் பின்னரும் அரசாங்கமோ எதிர்க்கட்சிகளோ வடக்கு-கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதில் அக்கறையோ ஆர்வமோ, காட்டியதில்லை. பிரச்சினைக்குத் தீர்வு அதுவா இதுவா? அதனை முன்னெடுப்பது நானா, நீயா?— என்று தமக்குள் இழுபறிப்பட்டுக் கொண்டு நிற்கிறார்கள். யுத்தத்தை நிறுத்துவதற்கோ அதன் முற்றேவையான தீர்வைக் கண்டுபிடிப்பதற்கான உண்மையான முயற்சியிலோ அரசும் சரி, எதிரணியும் சரி அக்கறை கொள்ளவில்லை.

திங்கட்கிழமை நடந்த மூன்றாவது குண்டுத் தாக்குதல் படை அதிகாரிகள் முதல் அரசியல்வாதிகள் எல்லோரையும் அச்சுறுத்தி உள்ளதாகத் தெரிகிறது. கடற்படைத்தளபதிக்கு நடந்தது ஏன் தமக்கு நடக்கக் கூடாது என்று அவர்கள் கேட்கத் தொடங்கிவிட்டனர். சிலர் தமது முந்திய தொனியையும் மாற்ற ஆரம்பித்துவிட்டனர்.

வடக்கு - கிழக்கு யுத்தத்துக்கு அரசாங்கம் மட்டுமன்றி எதிரணியினரும் பல வழிகளில் காரணர்களே. எனவே அவர்கள் அரசை ராஜினாமாச் செய்யக் கோருவதைவிட, வடக்கு-கிழக்கு யுத்தத்தை நிறுத்தி, இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காண்பதில் ஒன்று சேர்ந்து உழைப்பதே உகந்தது. அதுவே நாட்டையும் அவர்களையும் காப்பாற்றும்.

# தமிழீழ மீட்பு நிதி மீளப் பெறுபவர்கள்

யாழ்ப்பாணம், நவ. 19

தமிழீழ மீட்புநிதி செலுத்தியோரின் மாவீரர் தினத்தை ஒட்டி கடன் மீளளிப்பு செய்யப்படவுள்ள ஆயிரம் பேரின் ஒரு தொகுதியினரின் கடன் பத்திர இலக்கங்கள் ஏற்கனவே உதயனில் வெளியாகி இருந்தன.

சங்கானை, தெல்லிப்பளை, மானிப்பாய், சாவகச்சேரி ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் கடனை மீளப் பெற உள்ளோரின் கடன் பத்திர இலக்கங்கள் வருமாறு:-

### சங்கானை

| | | | |
|---|---|---|---|
| மாசி — 1992 | | | |
| யா/ச/ | 47 | 344 | 867 |
| | 2148 | 2331 | 3513 |
| | 4187 | 4415 | 4559 |
| பங்குனி — 1992 | | | |
| யா/ச/ | 34 | 110 | 411 |
| | 473 | 487 | 749 |
| | 1145 | 1606 | 2408 |
| சித்திரை — 1992 | | | |
| யா/ச/ | 82 | 201 | 404 |
| | 1056 | 1333 | 1502 |
| | 3348 | 3582 | 4034 |
| வைகாசி — 1992 | | | |
| யா/ச/ | 40 | 316 | 349 |
| | 1205 | 2189 | 2343 |
| | 3828 | 3919 | 4310 |
| ஆனி — 1992 | | | |
| யா/ச/ | 60 | 589 | 772 |
| | 803 | 2565 | 3244 |
| | 3471 | 3622 | 4201 |
| ஆடி — 1992 | | | |
| யா/ச/ | 184 | 194 | 215 |
| | 306 | 846 | 859 |
| | 666 | 2001 | 3526 |
| ஆவணி — 1992 | | | |
| யா/ச/ | 191 | 866 | 398 |
| | 738 | 880 | 951 |
| | 2442 | 3297 | 3936 |
| புரட்டாதி — 1992 | | | |
| யா/ச/ | 342 | 358 | 500 |
| | 570 | 1769 | 2516 |
| | 3022 | 3374 | 4316 |
| ஐப்பசி — 1992 | | | |
| யா/ச/ | 16 | 206 | 708 |
| | 816 | 853 | 909 |
| | 2151 | 3818 | 4104 |
| கார்த்திகை — 1992 | | | |
| யா/ச/ | 714 | 1066 | 1986 |
| | 2256 | 2806 | 2872 |
| | 3012 | 3675 | 4356 |

### தெல்லிப்பழை

| | | | |
|---|---|---|---|
| மாசி — 1992 | | | |
| யா/தெ/ | 21 | 30 | 415 |
| | 546 | 689 | 2680 |
| | 3072 | 4168 | |
| பங்குனி — 1992 | | | |
| யா/தெ/ | 186 | 376 | 497 |
| | 882 | 1457 | 2172 |
| | 2713 | 4171 | |
| சித்திரை — 1992 | | | |
| யா/தெ/ | 358 | 372 | 751 |
| | 1029 | 1224 | 1633 |
| | 1231 | 3126 | |
| வைகாசி — 1992 | | | |
| யா/தெ/ | 89 | 168 | 935 |
| | 1328 | 1981 | 2364 |
| | 3328 | 3559 | |
| ஆனி — 1992 | | | |
| யா/தெ/ | 685 | 828 | 936 |
| | 1600 | 1840 | 1869 |
| | 2673 | 2729 | |
| ஆடி — 1992 | | | |
| யா/தெ/ | 258 | 804 | 342 |
| | 347 | 401 | 1139 |
| | 3841 | 4443 | |
| ஆவணி — 1992 | | | |
| யா/தெ/ | 183 | 192 | 744 |
| | 2197 | 2394 | 3076 |
| | 3613 | 4321 | |
| புரட்டாதி — 1992 | | | |
| யா/தெ/ | 27 | 70 | 134 |
| | 217 | 472 | 612 |
| | 682 | 997 | |
| ஐப்பசி — 1992 | | | |
| யா/தெ/ | 13 | 279 | 282 |
| | 309 | 463 | 738 |
| | 3025 | 3129 | |
| கார்த்திகை — 1992 | | | |
| யா/தெ/ | 302 | 485 | 502 |
| | 518 | 545 | 651 |
| | 1355 | 3609 | |

### மானிப்பாய்

| | | | |
|---|---|---|---|
| மாசி — 1992 | | | |
| யா/மா/ | 154 | 829 | 911 |
| | 1316 | 2961 | 3071 |
| பங்குனி — 1992 | | | |
| யா/மா/ | 433 | 436 | 444 |
| | 2207 | 2665 | 3069 |
| சித்திரை — 1992 | | | |
| யா/மா/ | 120 | 312 | 636 |
| | 2280 | 3022 | 3261 |
| வைகாசி — 1992 | | | |
| யா/மா/ | 85 | 116 | 432 |
| | 928 | 3361 | 3542 |
| ஆனி — 1992 | | | |
| யா/மா/ | 88 | 97 | 247 |
| | 738 | 777 | 1443 |
| | 3780 | | |
| ஆடி — 1992 | | | |
| யா/மா/ | 214 | [illegible] | [illegible] |
| | 472 | [illegible] | [illegible] |
| | 2140 | | |
| ஆவணி — 1992 | | | |
| யா/மா/ | 285 | 352 | 423 |
| | 614 | 1068 | 1507 |
| | 2353 | | |
| புரட்டாதி — 1992 | | | |
| யா/மா/ | 92 | 241 | 429 |
| | 453 | 2431 | 2947 |
| ஐப்பசி — 1992 | | | |
| யா/மா/ | 45 | 82 | 86 |
| | 752 | 795 | 2184 |
| கார்த்திகை — 1992 | | | |
| யா/மா/ | 180 | 523 | 669 |
| | 1893 | 1534 | 2233 |

### சாவகச்சேரி

| | | | |
|---|---|---|---|
| மாசி — 1992 | | | |
| யா/சா/ | 06 | 137 | 241 |
| | 523 | 594 | 613 |
| | 704 | 1341 | 2069 |
| | 3665 | 3894 | 6478 |
| | 6942 | | |
| பங்குனி — 1992 | | | |
| யா/சா/ | 05 | 53 | 328 |
| | 546 | 2925 | 3495 |
| | 4635 | 5200 | 5336 |
| | 5529 | 5565 | 5640 |
| | 5862 | | |
| சித்திரை — 1992 | | | |
| யா/சா/ | 10 | 64 | 116 |
| | 330 | 414 | 604 |
| | 928 | 2306 | 2458 |
| | 2624 | 4868 | 5412 |
| | 5845 | | |
| வைகாசி — 1992 | | | |
| யா/சா/ | 184 | 272 | 370 |
| | 484 | 634 | 802 |
| | 891 | 1094 | 4201 |
| | 4486 | 4546 | 4655 |
| | 6219 | | |
| ஆனி — 1992 | | | |
| யா/சா/ | 07 | 42 | 460 |
| | 641 | 743 | 901 |
| | 1557 | 2245 | 3124 |
| | 3906 | 5624 | 6210 |
| | 7045 | | |
| ஆடி — 1992 | | | |
| யா/சா/ | 49 | 126 | 472 |
| | 853 | 1771 | 3486 |
| | 4065 | 4416 | 4500 |
| | 4602 | 5626 | 6121 |
| | 6425 | | |
| ஆவணி — 1992 | | | |
| யா/சா/ | 197 | 417 | 848 |
| | 895 | 966 | 1213 |
| | 2455 | 3354 | 4258 |
| | 4917 | 5105 | 5946 |
| | 6159 | | |
| புரட்டாதி — 1992 | | | |
| யா/சா/ | 360 | 729 | 752 |
| | 789 | 835 | 1912 |
| | 2150 | 2194 | 3326 |
| | 3946 | 4260 | 5592 |
| | 5767 | | |
| ஐப்பசி — 1992 | | | |
| யா/சா/ | 65 | 447 | 650 |
| | 718 | 972 | 1125 |
| | 1665 | 2318 | 2746 |
| | 2935 | 3655 | 5320 |
| | 6915 | | |
| கார்த்திகை — 1992 | | | |
| யா/சா/ | 51 | 175 | 462 |
| | 588 | 602 | 712 |
| | 1356 | 1373 | 1829 |
| | 2085 | 3069 | 4246 |
| | 4392 | | |

## குடாநாட்டில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

படுவதற்கு முன்னர் தனியார் துறையினர் மற்றும் ஐ.நோ.கூ: சபைகளினால் எடுத்து வரப்பட்ட பொருள்கள் குடாநாட்டில் இருந்தமையால், இவ்வளவு காலமும் அந்த குறையை நிரப்பி வந்தது என்றும் —

அந்த கையிருப்பும் தற்சமயம் முடிவடைந்து வருவதாகவும் — புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ் மாவட்டத்தில் தற்போது உள்ள உணவுப் பொருள்களின் நிலை குறித்து கொழும்பில் அரச அதிபருக்கு தகவல் அனுப்பப்பட்டுள்ளதாகவும் செயலக அதிகாரி தெரிவித்துள்ளார்.

[இ-3-162]

## பெனாசிர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

செய்யப்படுவதற்கு முன்னர், அவர் திறந்த வாகனம் ஒன்றில் நின்று கொண்டிருந்தார் என்றும் அப்போது அவர் மீது பொலீஸார் கண்ணீர் புகைக்குண்டுகளை வீசினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பெனஸிர் நின்று கொண்டிருந்த சொகுசு ஜீப்பின் சக்கரங்களை பொலீஸ் அதிகாரி ஒருவரே கழற்றினார் என்றும்— அதன் பின்னரே பெனாசிர் கைது செய்யப்பட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

[இ-எ]

## மருத்துவபீட...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தரப்பில் கூறப்பட்டது.

மருத்துவபீட மாணவர் ஒருவர் இடைநிறுத்தி வைக்கப்பட்டது பற்றி செய்தி கடந்த 6 ஆம் திகதி உதயனில் "மருத்துவ பீடத்தில் நடந்த 'ரகிங்' எதிரொலியாக மாணவன் இடைநிறுத்தம்" என்ற தலைப்பில் வெளியாகியிருந்தது தெரிந்ததே.

நேற்று மாணவர் பகிஷ்கரிப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து, மருத்துவ பீட மாணவர் ஒன்றியத்துக்கும் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கும் இடையில் பேச்சுவார்த்தை இடம்பெற்றது.

மேற்படி மாணவனுக்குக் காலவரையறை குறிப்பிடாமல் வழங்கப்பட்ட இடைநிறுத்த உத்தரவை நேற்று முன்தினத்துடன் காலாவதி செய்து அந்த மாணவன் தொடர்ந்து வகுப்புகளுக்கு சமுகமளிப்பதற்கான அனுமதியை வழங்குவது என்று நேற்று முன்தினமே பல்கலைக்கழக நிர்வாகம் முடிவு செய்திருந்தது என்றும்—

அதுபற்றி மேற்படி சந்திப்பின்போது மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளுக்கு கூறப்பட்டதாகவும்—

அதையடுத்து மாணவர்கள் தமது பகிஷ்கரிப்புப் போராட்டத்தைக் கைவிட முடிவு செய்தனர் என்றும் தெரிய வந்தது.

[உ-3-162]

## தற்கொடை வேள்வியில் ஆகுதியானவர் மாவீரர்

உணர்வைக் கொண்டு உயிரைக் கொடுத்த ஒரு தற்கொடை வேள்வி இந்த மண்ணில் நிகழ்ந்துகொண்டிருக்கின்றது. அதில் ஆகுதியானவர் மாவீரர். இங்கே இன்னுஞ்சிறு பிஞ்சுகூட எல்லையிலே காவல் நிற்கும். சேரழியும் தாய் நிலத்தைச் சீர்படுத்த முனைந்து நிற்கும். பட்டினியாய் கிடந்தாலும் பணியிலே சோர்ந்ததில்லை. பனிமழையில் நனைந்தாலும் பகலிரவு என்று பார்த்ததில்லை. தோள்களிலே - கடுகருவியுடன் வீழ்வதில்லை என்ற உறுதியுடனும் போராடியவர்கள், போராடி மறைந்து அடிமையாய் இருக்க மாட்டோம் என்ற உண்மையினை உணரச் செய்தவர், தமிழனின் வரலாற்றை புதிதாய் எழுத எமது கோவாய் நின்றவர், புதியதோர் புறமொன்றைப் படைத்தவர் எங்கள் மான மாவீரர். இவர்களின் கனவினை, நினைவினை, வாழ்வினை இன்று அனைவரும் மனதிலே கொள்ளுவோம்.

உரிமைக்காக, நாட்டிற்காக, எமக்களுக்காக, உமக்களுக்காக எழுந்து வந்த வீரர் இவரை மறந்து போவதா? கடலின் கரையில் மோதும் அலைகள் சலிப்பதில்லை;

## மாவீரர் நினைவுச் சித்திரம்

போனவர்கள் மாவீரர்;

கண்ணீரில் வாடுகின்றதன் இனத்தை வாழவைக்க தன்னை எண்ணாமல் - தன் சுகம் பேணாமல் மண்ணையே பெரிதென நினைத்து மானமே உயிரென்று - புறப்பட்டுக் களமாடி மடிந்து போனவர் மாவீரர்.

தமிழ் தமிழன் என்பதை உலகிலே துலங்க வைத்தனர், தமிழினம் ஆண்ட கதையினை உயிரை இழக்க/இழந்தும் எங்கள் வீரர் தளர்ந்ததில்லை, மீண்டும் உணர்வு கொண்டு எழுந்து வர - மறந்ததில்லை, இன்று இவர்கள் எங்களுடன் இந்த மண்ணில், இந்தக் காற்றில், இந்த அலையில் கலந்து வாழுகின்றனர்; ஒரு விடிந்த விடியலில் ஒளிபாயும் இவரே வருவார். மாவீரர்கள் சாவிலும் வாழ்கின்றனர்.

★

# மாவீரர் எழுச்சி வார நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், நவ. 19

மாவீரர் எழுச்சி வாரத்தின் ஐந்தாம் நாளான இன்று கருத்தரங்குகள், சிரமதானப் பணிகள், மற்றும் கலை நிகழ்ச்சிகள் கோட்ட ரீதியாகவும் வலைப் பிரிவுகளில் நடைபெறுகின்றன.

கருத்தரங்குகள் வழமை போல மாலை வேளையில் வெவ்வேறு நேரங்களில் இடம்பெறும்; விடுதலைப் புலிகள் பிரமுகர்களின் தலைமை உரைகளும், எழுச்சி உரைகளும், கருத்தரங்குகளில் இடம்பெறும்;

### கருத்தரங்குகள்

சண்டிலிப்பாய் வட்டத்தில் சங்குவேலி ஸ்ரீ அம்பாள் ச. ச. நிலையம் கோப்பாய் வட்டத்தில் புத்தூர் மத்திய ச. ச. நி., நல்லூர் வட்டத்தில் கோண்டாவில் மத்திய கிராம முன்னேற்றச் சங்கம், சங்கானை வட்டம் தொட்டிலடி ச. ச. நி., தெல்லிப்பளை வட்டம் மல்லாகம் ஞானப்பிரகாச ச. ச. நி., சண்டிலிப்பாய் வட்டம் சீரணி ச. ச. நி. ஆகிய இடங்களிலும்—

வடமராட்சி-கரவெட்டி வட்டத்தில் ஞானாசாரியார் கல்லூரி, கைதடி வட்டத்தில் நுணாவில் தனங்கிளப்பு ஸ்ரீமுருகன் ச. ச. நி., கொடிகாமம் வட்டத்தில் கரம்பைக் குறிச்சி மதிஒளி ச. ச. நி., பளைவட்டம் அல்லிப்பழை வேலிராஜ் ச. ச. நி. சாவகச்சேரி வட்டம் நுணாவில் மேற்கு அ. த. க. பாடசாலை, தெற்பலி பண்டிதர் குடியிருப்பு புனைமிரத நிலைய முகாம் ஆகிய இடங்களிலும்—

வடமராட்சி கிழக்கு தாளையடி வட்டம் குடத்தனை நினைவுத் தூபிபடி, பொற்பதி ச. ச. நி., அருகாமை ஆகிய இடங்களிலும்,

கடற்புலிகளின் ஏற்பாட்டில் வடமராட்சி கிழக்கு வட்டம், இப்பருட்டி ச. ச. நி., சுப்பர் மடம் ச. ச. நி., வலிகாமம் கிழக்கு வட்டம், அராலி மேற்கு ச. ச. நி., அராலி தெற்கு ச. ச. நி., அராலி கிழக்கு ச. ச. நி., ஆகிய இடங்களிலும் கருத்தரங்குகள் நடைபெறும்;

### சிரமதானம்

தீவகக் கோட்டத்தில் யாழ். புனைமிரத நிலைய முகாம் துப்புரவு செய்தல், உடுப்பிட்டி வட்டத்தில் உடுப்பிட்டி சந்தி வல்லை வீதி துப்புரவு செய்தல், சங்கானை வட்டம் உதயதாரகை ச. ச. நி. வீதி, கலைவாணி ச. ச. நி. வீதி. துப்புரவு செய்தல்.

உடுவில் வட்டத்தில் இணுவில் கலாஜோதி ச. ச. நி., சந்தர் கோயில் முகாம் துப்புரவு செய்தல், வலிகாமம் கிழக்கு நாவாந்துறை கடைச் சந்தி, கடற்கரை வீதி துப்புரவு செய்தல், வடமராட்சி கிழக்கு வட்டத்தில் குடத்தனைச் சந்தியிலுள்ள பன்னிரு வேங்கைகளின் நினைவுத் தூபி அமைந்திருக்கும் சுற்றாடல் துப்புரவு செய்தல்.

விடுதலைப்புலிகள் ஏற்பாட்டில் மாவீரர் நினைவுக் கூட்டமும், கலை நிகழ்ச்சிகளும் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும்.

## மாவீரர் நாள் - 1992

**மாவீரர்களே!**

நீங்கள் புதைந்த இடத்தில் புல்லா முளைக்கிறது? இல்லையே!

போராடும் எங்களுக்குள் புது வீரமல்லவா பிறக்கிறது

நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்.

— தமிழீழ மாவீரர் பணியகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா கணபதிப்பிள்ளை

(இளைப்பாறிய லிகிதர், கணக்குப் பகுதி, இலங்கைப் போக்குவரத்துச் சபை, வவுனியாச் சாலை)

சரசாலை தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லையா கணபதிப்பிள்ளையின் ஈமக்கிரியைகள் தவிர்க்கமுடியாத காரணத்தினால் நேற்று (18-11-92) நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகிறோம். அன்னாரது மரணச் சடங்கில் கலந்துகொண்டு உதவி, ஒத்தாசை புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், வட பிராந்திய போக்குவரத்துச் சபையினர் ஆகியோருக்கு எமது பூர்வமான நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

தகவல்:
விஜயன் ரான்ஸ்போட், சரசாலை. — ச. விஜயரத்தினம் (23320)

## வேதமுத்து சாமுவேல்

(ஆசிரியர், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி)

உரும்பராயைப் பிறப்பிடமாகவும் வண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட வேதமுத்து சாமுவேல் அவர்கள் காலமானார். இவர் மரியம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வேதமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், அற்புதம், காலஞ்சென்ற பிலிப்பு, காலஞ்சென்ற மரியதாஸ், ஞானசப்பிள்ளை, அன்னப்பிள்ளை, எலிசபெத், ஜோசப் திரேசம்மா, செபமாலை ஞானப்பு ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (19-11 92) இன்று மாலை 4 00 மணிக்கு உரும்பராய் புனித மிக்கேல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
உரும்பராய் கிழக்கு, உரும்பராய். — வேதமுத்து அற்புதம் (சகோதரன்)
(23321)

## தம்பையா தளையசிங்கம் [ஆசாரி]

[4 ஆம் வட்டாரம், புங்குடுதீவு]

புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மானிப்பாய் வீதி ஐந்து சந்தியில் வசித்தவருமாகிய தம்பையா தளையசிங்கம் 18 - 11 - 92 இல் காலமானார். இவர் பாக்கியத்தின் அன்புக் கணவரும் விமலாதேவி, சந்திராதேவி, பேபி, வாசு, [பிரான்ஸ்] வசி, விஜயன், வரதன், கேமா ஆகியோரின் அன்புத் தந்தையும் மனோகரன், ஜெகநாதன் ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் 18 - 11 - 92 புதன்கிழமை தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஐந்து சந்தி, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (5582) — தகவல்: மு. கந்தையா

## நடராஜா யோகலிங்கம்

சுழிபுரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற நடராஜாவினதும், தெய்வானையினதும் அருமைப் புதல்வன் யோகலிங்கம் ஜேர்மனியில் காலமானார். இவர் யோகலட்சுமியின் அன்புக் கணவரும், றதீசன், சுவர்ணா, ரஜீவன் ஆகியோரின் அருமைத் தந்தையும், அன்னலட்சுமி, நற்குணசிங்கம், சிவலிங்கம் [விஜயா ரேடிங் ஏஜன்சி, கொழும்பு], சிவானந்தலிங்கம் [கனடா] ஆகியோரின் அருமைச் சகோதரனும், காலஞ்சென்ற இராசரத்தினம் - வள்ளியம்மை ஆகியோரின் மருமகனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 14-11-92 சனிக்கிழமை ஜேர்மனியில் நடைபெற்றன.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
"மைரன் குன்று" ஊரியாட்டி, சுன்னாகம். — திருமதி வி. மங்களம் [சிறிய தாயார்] (5431)

## பிரம்மஸ்ரீ விசுவநாதக் குருக்கள் வரதராஜக் குருக்கள்

(முன்னைநாள் பிரதமகுரு, ஆனைப்பந்தி சித்தி விநாயகர் ஆலயம், மட்டக்களப்பு)

பிரம்மஸ்ரீ வி. வரதராஜக்குருக்கள் கடந்த 14-11-92 ஆம் திகதி சனிக்கிழமை சிவபதமடைந்தார். அன்னார் அன்னம்மாவின் அன்புக் கணவரும், ஜயலட்சுமி (ராசாத்தி), சத்தியலட்சுமி (பங்கஜம்), சந்தானலட்சுமி (பேபி), சௌபாக்கியலட்சுமி (அம்பிகா), ஈஸ்வரி சண்முகதாஸன், சிவகுமாரக் குருக்கள், சத்தியபாமா (பாமா) [அரச கரும மொழித் திணைக்களம்] ஆகியோரின் அன்புத் தந்தையாரும், கு. கணேசசர்மா (வவுனியா), காலஞ்சென்ற ச. சதானந்தன் [ஆசிரியர்] ச. இராமச்சந்திரஐயர் [தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்]. சு. சரவணபவான் (சக்தி நூல் நிலையம் மட்டக்களப்பு), வி. சந்திரா (ஆசிரியை திருமலை), ப. விஜயபாஸ்கர் (ஜோதிலிங்கம் கம்பனி லிமிட்டெட், கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், உமாமகேஸ்வரி (ஆசிரியை வவுனியா மகாவித்தியாலயம்), சுகன்யா (விவசாயபீடம், யாழ் பல்கலைக்கழகம்), ரங்கன், நிரஞ்சன், சுவர்னா, சௌந்தரி, ரகுநந்தன், ஞானகரன், அபராஜிதன், பிரணவன், அபர்னா ஆகியோரின் அன்புப்பேரனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 16-11-92 திங்கட்கிழமை மட்டக்களப்பில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகிறேன்.

தகவல்:
ச. இராமச்சந்திர ஐயர் (மருமகன்)
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. [23315]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 332/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 19-11-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# செயலகத்தை ஸ்தம்பிக்கச் செய்ய டிச 5 இல் வெகுசனப் போராட்டம்!

## கடமையிலிருந்து தவறுவதாக கூட்டுறவுச் சபை சாடல்

யாழ்ப்பாணம், நவ. 19

அத்தியாவசிய உணவுப் பொருள்களையும் உணவு முத்திரை, மாணவர் முத்திரை போன்றவற்றுக்கு வழங்குவதற்குத் தேவையான உணவுப் பொருள்களையும் ப. நோ. கூ. சங்கங்களுக்கு வழங்காதது யாழ். செயலகம் மறுத்துள்ளதைக் கண்டித்து அடுத்த மாதம் ஐந்தாம் திகதி யாழ். செயலகத்தை ஸ்தம்பிக்கச் செய்யும் வகையில் வெகுசனப் போராட்டம் ஒன்றை நடத்த யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை முன்திபு செய்து வருகிறது.

போதிய உணவுப் பொருள்கள் கொழும்பில் இருந்து வாராததை அடுத்து, யாழ். மாவட்டத்தில் உள்ள ப. நோ. கூ. சங்கங்களுக்கு முத்திரைகளுக்குரிய உணவுப் பொருள்களை வழங்கமுடியாது என்றும்—

ப. நோ. கூ. சங்கங்களே தாமாக கொழும்பில் இருந்து உணவுப் பொருள்களை எடுத்து வர வேண்டும் என்றும் — யாழ். செயலகம் கூட்டுறவு உதவி ஆணையாளருக்கு அறிவித்திருந்தது. இதனை அடுத்தே ப. நோ. கூ. சங்கங்கள் அமைக்க வகிக்கும் கூட்டுறவுச் சபை போர்க்கொடி தூக்கியுள்ளது.

இந்த விடயம் பற்றி ஆராய்வதற்காக யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபையினர் திங்கட்கிழமை விஷேசமாகக் கூடி ஆராய்ந்தனர்.

கூட்டத்தில் கலந்துகொண்ட பிரதிநிதிகள் செயலகத்தின் முடிவைக் கண்டித்துப் பேசினர்.

"யாழ் அரச அதிபர் ராஜினாமாச் செய்ய வேண்டும்" "பொருள் வழங்க மறுக்கும் செயலகத்தை செயல் இழக்கச் செய்ய வேண்டும்" என்று கூட்டத்தில் பேசியவர்களில் பலரும் குரல் எழுப்பினர்.

இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் இந்த விடயம் குறித்து திருப்தியான பதிலை யாழ். செயலகம் தெரிவிக்காவிடில் அடுத்த மாதம் 5 ஆம் திகதியன்று பெரும் வெகுசனப் போராட்டம் ஒன்றை நடத்துவதென முடிவு செய்யப்பட்டதாக தெரியவந்தது.

இன்றைய சூழ்நிலையில் உணவு முத்திரை, மாணவர் முத்திரை ஆகியவற்றுக்குரிய பொருள்களை ப. நோ. கூ. சங்கங்களே கொள்வனவு செய்து வழங்கினால், மக்கள் மீது மேலும் சுமையை ஏற்றுவதாகவும், நிவாரண முத்திரைகளால் மக்கள் பயன் எதனையும் பெறமுடியாத நிலையை உருவாக்குவதாகவும் அமையும் என்றும் கூட்டுறவுச் சபை யாழ். அரச அதிபருக்கு அனுப்பிய மகஜர் ஒன்றில் சுட்டிக்காட்டி உள்ளது.

### எழுச்சி விழா

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் ஏற்பாடு செய்துள்ள மாவீரர் எழுச்சி வார நிகழ்வுகள் இன்று பிற்பகல் 3 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளன.

இன்றைய நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா கலந்து கொள்வார்.

★ ★ ★

வேலணைக் கல்விக் கோட்டம் நடத்தும் மாவீரர் எழுச்சிவிழா இன்று வியாழன் பிற்பகல் 2-00 மணிக்கு கண்ணகி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

வேலணைக் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. புலேந்திரன் எழுச்சி விழாவுக்குத் தலைமை வகிப்பார்.

### நாளை

காரைநகர் கொத்தணியைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு காரைநகர் மணிவாசகர் சபை நடத்தும் சைவசமய பாடப் பரீட்சை நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

ஐந்து பரீட்சை நிலையங்களில் பிற்பகல் ஒரு மணிக்கு பரீட்சை ஆரம்பமாகும்.

### விரிவுரைக்கு திரும்பினர்

கடந்த இரண்டு நாட்களாக தமது விரிவுரைகளைப் பகிஷ்கரித்து வந்த யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறை மாணவர்கள் தமது பகிஷ்கரிப்பைத் தற்காலிகமாக இடைநிறுத்தி நேற்று மீண்டும் விரிவுரைகளுக்குச் சமுகமளித்தனர்.

சித்த மருத்துவத்துறைத் தலைவர் டாக்டர் எஸ். பவானியின் ராஜினாமாவைத் தொடர்ந்து ஏற்பட்ட நிலைமையை அடுத்தே மாணவர் இந்தப் பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தமது கோரிக்கை தொடர்பாக பல்கலைக்கழக நிர்வாகத்தின் முடிவு எதிர்வரும் 21 ஆம் திகதி தெரிவிக்கப்படும் வரை பகிஷ்கரிப்பை கைவிட்டு கறுப்புப்பட்டி அணிந்து மாணவர்கள் விரிவுரைகளுக்கு சமுகமளிப்பர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ-5)

### நியூஸிலாந்து..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நடத்தி இலங்கையில் தொடர்ந்து விளையாடுவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது வாக்கெடுப்பில் எதிராக வாக்களித்த ஐந்து வீரர்களே திருப்பி அனுப்பப்பட உள்ளனர். (இ எ)

### போரை முடிவுக்கு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

அரச தரப்பு அரசியல்வாதிகளும் எதிர்த்தரப்பு அரசியல்வாதிகளும் ஒன்று சேர்ந்து வடக்கு - கிழக்கு மோதலுக்கு தீர்வுகாண வேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர்.

தமிழ்ப் போராளிகளும் அரசும் பேச்சுவார்த்தை நடத்தி சமாதான உடன்படிக்கைக்கு வரக்கூடிய திட்டம் ஒன்றை சமாதானக்குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அமைதியையும் சமாதானத்தையும் கொண்டு வருவதை ஒரு கட்சி அரசியல் விவகாரமாக்கக்கூடாது இது ஒரு தேசிய விவகாரம் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு பிரச்சினையில் தொடர்புடைய எல்லாத் தரப்பினரும் கலந்துரையாடக் கூடிய ஒன்பது அம்சங்களை இந்தக்குழு தமது அறிக்கையில் வெளியிட்டுள்ளது.

இதில் விடுதலைப் புலிகள் இயக்கமும் அடங்கியுள்ளது. இந்த குழுவின் திட்டம் ஒருமித்த இலங்கை என்ற கட்டுக்கோப்பினுள் அமைந்தது.

அரசியல் சாசன வழக்கறிஞர்களின் உதவியுடன் தீட்டப்பட்ட தமது திட்டத்தின் கீழ் அரசும் தமிழ்ப் போராளிகளும் இணக்கமான மாற்றத்தைக் கொண்டு வர வழிவகையுண்டு எனவும் இக்குழு கூறுகின்றது. (அ-எ-6)



## குகன் கல்வி நிறுவனம்

ஆவரங்கால்

A/L 93, 94

கணக்கியல்

எஸ். நந்தகுமார்

B. Com (Hons)



## முக்கிய அறிவித்தல்

யாழ். மாவட்ட எல்லைக்குட்பட்ட இறைச்சிக்கடை உரிமையாளர்கள் அனைவரையும் 20-11 92 வெள்ளிக்கிழமை முற்பகல் 9-00 மணிக்கு கின்னக்கடை இல. 9, காரியாலயத்தில் நடைபெறும் பொதுக் கூட்டத்திற்கு தவறாது சமுகம் தரும்படி வேண்டுகின்றேன்.

நன்றி

க. சி. கிருஷ்ணன்
செயலாளர்
யாழ். மாவட்ட இறைச்சிக்கடை உரிமையாளர் சமாசம்.
(கி/3866)

## நன்றி நவில்கிறோம்

கடந்த 15- 11- 92இல் நடைபெற்ற சங்கரப்பிள்ளை தம்பிஐயா அவர்களின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் கல்வித்துறை சார்ந்த சகலருக்கும், ஏனைய துறை சார்ந்தவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், மலர்வளையங்கள் சாத்தியவர்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றி நவில்கிறோம்.

இ. சுந்தரலிங்கம்
[பிராந்திய கல்விப்பணிப்பாளர்]
இணுவில் மேற்கு, இணுவில். [23318]

## மரண அறிவித்தல்

### கனகசபை கணேசன்

(இளைப்பாறிய தபாற்கந்தோர் பரிசோதகர்)

பருத்தித்துறை தம்பசெட்டியைப் பிறப்பிடமாகவும், அருணோதயம், மூளாய் வீதி, சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை கணேசன் 09-11-92 இல் கொழும்பில் காலமானார். இவர் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், சுதர்சனம் [Railway Head Guard] இன் அன்புச் சகோதரரும், ராதாகிருஷ்ணன் [கனடா], சாந்திதேவி [கனடா], நிரஞ்சனாதேவி, வசந்தாதேவி [ஹொங்கொங்], பாலகிருஷ்ணன் [கனடா], மோகனகிருஷ்ணன் [கனடா], ரதனதேவி, காலஞ்சென்ற லலிதாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், அங்கயற்கண்ணி [நளினி - கனடா], விஜயராஜா [ஜேர்மனி], சந்திரகுமார் [தொழில் அமைச்சு], ராதாக்கிருஷ்ணா [ஹொங்கொங்] ஆகியோரின் அன்பு மாமனாரும், யதுநந்தனின் [கனடா] அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 14-11-92 இல் மாதம்பிட்டி மயானத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
120, K. K. S. Rd, Jaffna. — S. N. ஸ்ரீதரன் (5583)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org